Christian
Home Festival
11-10-80
at
Uduvil at 3-30 p. m.

# THE MORNING STAR

*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. Q B / 8920 / 78.*

Established: 1841 : A Christian Weekly : Published Every Friday

Vol. 140 JAFFNA, FRIDAY, 3RD OCTOBER, 1980 No. 40

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

*Subscription*

Inland: Rs. 30/- per year.
Foreign Air Mail:
Rs. 90/- per year.

*Apply to:*
The Manager,
'Morning Star',
VADDUKODDAI.

## The World Council of Churches

O *Dr. Philip Potter's* term of office as General Secretary of the WCC has been extended from 1-11-82 to 31-10-85. During his absence on leave from 15-9-80 to 20-4-81 Dr. Konrad Raiser the Deputy General Secretary will act for him.

O Eminent Chinese Theologian and one of the first six Presidents of the WCC *Dr. Chan Tzu Ch'en* died at the age of 91 in Peking. He was a leader of the Chinese Protestants "Three Self" movements.

O *Mrs. Van Wartenberg* (37) is the new Director of the WCC Sub-Unit on Women in Church and Society. Ordained a minister of the Church in 1977, she has published various books and study materials on South Afrca.

## Pottuvil Seat Nomination

*The United National Party* has been called upon by the Elections Commissioner to nominate a member to fill the vacant seat a Pottuvil.

The seat fill vacant on the death of Mr. N. Canagaratnam, District Minister of Batticaloa, who won his seat on the TULF ticket, but crossed over to the UNP, before the promulgation of the New constituition in September 1978.

The TULF Secretary General moved the Court of Appeal for an order restraining the Election Commissioner from calling upon the UNP to nominate someone to fill the vacancy.

The Application was dismissed by the Court. The Working Party of the UNP will meet on 21-10-80 to nominate a candidate. The President, Mr. J. R. Jeyawardene will preside at this meeting.

## New General Secretary of CLS

Mr. Dhevaratnam Danforth till recently of the Sri Lanka Administrative Service has been appointed General Secretary of the Christian Literature Society.

He is the son of the late Mr. C. W. K. Damforth and Mrs. Damforth of Uduvil.

Mr. C. W. K. Damforth was for many years a Worker in the Mission and later the Jaffna Council of the South India United Church.

## IN BRIEF

O *The Hindu Organ* celebrated its *91st Anniversary* on 11-9-80 with the publication of a Special Issue. The paper was established in 1889. Mr. R. N. Sivaprakasam, Attorney-at-Law is its present Editor.

O *A Staggering 24,000 Million Rupees* is the expenditure requirements for the Government's Development Budget for next year.

# 33rd ANNUAL FESTIVAL OF THE J D C S I

"Apart from me you can do nothing."

St. John XV - 4.

The 33rd Annual Festival of the Jaffna Diocesan Council was held on 27-9-80 at the Cathedral Church, Vaddukoddai. The whole day programme commenced with a Communion Service at which the Rt. Rev. D. J. Ambalavanar, the Bishop of the JDCSI was the Celebrant. He was assisted by Rev. J. J. Ratnarajah, Rev. D. R. Ampalavanar and Rev. S. Jeyanesan.

The Lessons were read by Mrs. I. Jeyakumar, Mr. George Vaithianathan and Mr. S. C. Arnold.

## The Sermon

The Rev. (Dr.) Telfer Mook, Secretary of the UCBWM was the preacher at the Service. Basing his Sermon on verses 1 — 7 of St. John's Gospel, Chapter 15, which contains the well known metaphor of the vine and the branches, Dr. Mook said that communion with God is "our eternal occupation". It is not a leisure-time hobby.

The Door to God's presence is always open unlike a historic door (of St. Peter's Cathedral, Rome) which, it is said, has opened so far only four times in the history of the Cathedral.

On such rare occasions, the Pope approaches it and strikes it three times with a silver hammer. It then flings open and those who pass that way never do so again.

### *Symbolic Significance*

Whatever its historical significance, that door has to us a symbolic significance. If the door to God's presence opens only once in a quarter of a century how eagerly we would wait.

But to us Christians, the privilege of prayer and communion with God has become so common place and therefore so often neglected, because God's door to His presence is *always open.*

His door, is not meant to be opened only during time of distress or only for begging for spiritual gifts. It is a means of continuous fellowship with Him till we are one with God and lose sight of ourselves and our goals.

The Mar Thoma Church Prayer Book has the following line which we should make our own Prayer: — "Father, make clear to me my eternal occupation, my occupation with Thee."

## Public Meeting

After a programme of music, followed by a Fellowship Lunch, the Public Meeting Commenced at 2-30 p. m.

Welcoming Dr. Telfer Mook as the Chief Speaker at the 33rd Annual Festival of the Jaffna Diocese, Bishop Ambalavanar who presided at the Public Meeting, said that the arrival of the missionaries in Jaffna (15-10-1816) was celebrated annually by what was once called the October Festival.

Later, with the inauguration of the Jaffna Diocese of the CSI on 27-9-47, the Festival was advanced to September but all the same it was an occasion which celebrated *two* great events in the life of our church — the arrival of the American Missionaries and the inauguration of the Jaffna Diocese which took over from the Mission the work it had dene in Jaffna since 1816.

The relationship between the American Board and the Diocese was not merely a two-way traffic but a link with a global vision. Dr. Mook's presence at the Festival served to remind the Diocese of its ecumenical character

### *Vitality in the teeth of Oppression*

In his address, Dr. Mook referred to the systems of oppression in the World today in the midst of which the Christian Church is seeking to maintain an undaunted strength and vitality.

The churches in Indonesia, India and China have shown increase in numbers inspite of the pain and the anguish the Christians had to face in their daily lives.

In some countries as Taiwan, Phillippines "dissappearences" and of long term imprisonment of dissidents, were a common feature.

The Christian witness of those who are today living and growing in their faith in the midst of oppression, the Ministry of reconciliation, meaningfui dialogue between faiths and denominations are phenomena which make this era a glorious one in the history of the Christian Church.

The young pioneer missionaries who set out to India but landed in Ceylon in 1816, were addressed by a Senior Missionary at the final Service of Commissioning. He told them, "people must see Christ in you before you preach a word: never preach the theory of the gospel before setting in practice in your life the gospel itself."

The programme for the day concluded with a Fellowship Tea on the grounds of the Cathedral Church.

## Trustees Feted by Jaffna College Round-Table

Rev. Dr. Telfer Mook, Mr. Robert L. Day and Mr. Richard N. Edmunds were feted by Jaffna College Round-Table on Thursday the 25th instant. Mr. T. Viswanathan, the Chairman of the Round-Table in his welcome speech traced the history of the Trust and said that in 1872, Rs. 37,000 was collected in Ceylon and India and sent to America to establish the Trust. He also said that the problems of the teachers have become acute because of the galloping inflation. The teachers of Jaffna College are glad that the Board of Directors has granted a special allowance. Special thanks and mention must be made of Rt. Rev. D. J. Ambalavanar who understood the problem of the teachers almost spontaneously and recommended a generous increase.

Rev. Dr. Telfer Mook in his reply said that the Trustees have to get the ideas of the teachers and that they would support any programme attempted by the staff.

— *Cor.*

## IN MEMORIAM

IN LOVING MEMORY
OF

**Mylvaganam Moses Muththu**

Called to rest on 9-10-72

"*In God's care you rest above in our hearts you dwell with love.*"

Affectionately remembered by his children, Grand children and great Grand children.

"Imyanan"
Uduppiddy. 1-10-80.

## IN MEMORIAM

IN LOVING AND FRAGRANT
MEMORY OF

**Theophilus Kanagaratnam Curtis**

Born: 19th October, 1908
Called to Glory: 4th October, 1976

"*God, your will, nothing more, nothing less, nothing else*"

affectionately remembered by his loved ones here and abroad.

Hulftsdorf.

# உதயதாரகை

## UTHAYATHARAKAI

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.]        [ வெள்ளிதோறும் வெளிவருவது.

"நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம்"


### தாரகை ஒளி

ஒரு மனிதன் எண்ணுவதற்கு ஒன்றும் இல்லாத நிலை வந்தவுடனேதான் அவனுடைய வயது எண்ணப்படுகின்றது.

— எமேர்சன்.


மலர் 140 ]        3 — 10 — 1980        [ இதழ் 40


## நமக்கு வயது முப்பத்திமூன்று

நமக்கு வயது முப்பத்தி மூன்ருகிவிட்டது! ஆமாம்; நாம் அங்கத்தவர்களாயிருக்கும் தென் இந்திய சபையின் யாழ்ப்பாண அத்தியட்சாதினத்திற்கு முப்பத்திமூன்று வயதாகிவிட்டது! 1947-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27-ந் திகதி சென்னை சென்ஜோர்ஜ் ஆசனக் கோவிலில் தென் இந்திய திருச்சபை என்ற மகோன்னத திருச்சபை ஐக்கியம் மலர்ந்தது அதன் தொடக்க விழாவில் ஒன்பது பேராயர்கள் அபிடேகம் செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவர்தான் நமது முன்ஞட் பேராயர் S. குலேந்திரன்.

கடந்த 33 வருட காலத்தில் தென் இந்திய திருச்சபை சந்தித்த பிரச்சினைகள் அநேகம். இறைவனிடமிருந்து பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்கள் அநேகம். சபைப் பிரிவினைகளும் போட்டிகளும் பொருமையும் இந்திய கிறிஸ்தவர்கள் மத்தியில் மலிந்திருந்த காலத்தில் பேராயர் அசரையா போன்ற நல்லெண்ணம் கொண்டவர்கள் சபை ஐக்கியத்திற்காகத் தம் வாழ்வையே அர்ப்பணம் செய்தனர். பலவித இடர்பாடுகளையும் கஷ்டங்களையும் தமது உழைப்பாலும், உறுதியான விசுவாசத்தினாலும் வெற்றி கண்டு தென் இந்திய திருச்சபை என்ற ஐக்கியத்தை உருவாக்கினர். அப்பொழுது இதன் வெற்றியைக் கண்டு பரவசமாகிய கிறிஸ்தவர்கள் இறுதியாக வெற்றி வந்துவிட்டது ("At last") என்று மகிழ்ந்தனர்.

இன்று தென் இந்திய திருச்சபை பல கிறிஸ்தவர்கட்குக் கிடைக்காத அனுபவங்கள் பலவற்றை நமக்குத் தருவதாக அமைந்திருக்கிறது அதிற் காணப்படும் ஐக்கியம் பல இன மக்களின் நட்பு, கூட்டுறவு, அன்னியோன்னியம் என்பவை இலங்கையிலுள்ள ஏனைய கிறிஸ்தவர் கட்குக் கிடைக்காததொன்ருகும். இதற்காக நாம் கடவுளுக்கு நன்றி செலுத்துவதோடமையாது, அவருடைய மட்டற்ற கிருபைக்குப் பாத்திரவான்களாகவும் இருத்தல் வேண்டும்.

இந்த வேளையில் நம்நாட்டில் நமக்கு முக்கியமானதொரு பணி உண்டென்பதனையும் நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். இலங்கையில் யாழ்ப்பாண அத்தியட்சாதீனம் மட்டுமே ஒரு ஐக்கிய சபையில் அங்கத்துவம் பெற்றிருக்கின்றது. எனவே சபைப் பிரிவினைகளும் போட்டிகளும் மலிந்திருக்கும் நமது நாட்டில் திருச்சபை ஒற்றுமையேற்படுத்துவதில் நமக்கு முக்கியமான பணியுண்டு. அப்பணியினை நாம் சிறப்பாகச் செய்து முடித்தலே நமது தலையாய கடமை. இதனை நிறைவேற்ற இறைவனின் அருளை வேண்டுவோமாக.

## நமக்குள்ளே ஒரு பீஷ்மர் — சபாபதி குலேந்திரன்

மகாபாரதத்திலே நாம் சந்திக்கும் ஒரு மகோன்னத பாத்திரம் பீஷ்மராகும். இவரைத் "தேவ விரதன்" என்று ராஜாஜி குறிப்பிடுகின்ருர் தாம் கடைப்பிடித்த கடும் விரதங்களினுல் நீண்ட காலம் உயிர் வாழ்ந்து பரத குலத்திற்குச் சந்ததி சந்ததியாக அறிவுரை கூறியவர். அவருடைய சமகாலத்தவர் பலர் மறைந்துபோன பின்னரும், தமது சகோதரர்களின் பிள்ளைகட்கும், பிள்ளைகளின் பிள்ளைகட்கும், நண்பனுய், மந்திரியாய், நல்லாசிரியனுய் வாழ்ந்தவர். பாரதப் போரில் பாண்டவர் சேனையை எதிர்த்து நின்று போராடியவர். பாரதப் போர் வரை வாலிபனுகவே திகழ்ந்தவர்.

சென்ற மாதம் இருபத்திமூன்ரும் திகதி தமது எண்பதாவது பிறந்த தினத்தைக் கொண்டாடிய மகாகனம் சபாபதி குலேந்திரன் நமக்குள்ளே ஒரு பீஷ்மர். மகாகனம் சபாபதி குலேந்திரனின் சமகாலத்தவர் பலர் திரைக்கு அப்பாற் சென்றுவிட்டனர். வண. S. K. பங்கர், வண. D. T. நைல்ஸ், பெரியண்ணன் செல்வரத்தினம், மகாகனம் லக்தாசா — டி. மெல், மகாகனம் ஹரல்ட் டி. சொய்சா, மகாகனம் டேவிட் செல்லப்பா, திரு. எம். திருச்செல்வம் Q. C, தந்தை செல்வா, நீதியரசர் ஸ்ரீஸ்கந்தராஜா போன்ற பெருந்தகைகளின் உற்ற நண்பனுய் விளங்கிய குலேந்திரன் அவர்கள் இன்று புதிய தலைமுறையின் வழிகாட்டி; அறிவுரை கூறும் நல்லாசான்; உலோகாயுதமும், பொருளாசையும் பீடித்துள்ள நமது சமுதாயத்தின் கலங்கரை விளக்கம்.

* * * * * * * * * * * * *

எஸ். ஜெபநேசன்

* * * * * * * * * * * * *

1901-ம் ஆண்டு தோன்றிய சபாபதி குலேந்திரன், சென். ஜோன்ஸ் கல்லூரியினதும், யாழ்ப்பாணக் கல்லூரியினதும் பழைய மாணவன். அக்காலத்தில் இலங்கைப் பல்கலைக் கழகக் கல்லூரிப் பட்டதாரிக்கு இருந்த வேலை வாய்ப்புக்கள் சொல்லிலடங்கா. ஆனல் தமது வாழ்வை இறை பணிக்கு அர்ப்பணித்து, தமது இறையியற் கல்லூரியில் செரம்பூர் இறையியற் படிப்பைப் பெற்றுக்கொண்டார். 1931-ம் ஆண்டு குருவாக அபிடேகம் பண்ணப்பட்டார். 1947-ல் தென் இந்திய திருச்சபை மலர்ந்தபொழுது, குலேந்திரன் யாழ்ப்பாணத்தின் பேராயராக அபிடேகம் பண்ணப்பட்டார். யாழ்ப்பாண அத்தியட்சாதீனத்தின் வரலாறு கால்நூற்ருண்டாகச் சபாபதி குலேந்திரனின் வரலாருகவே திகழ்ந்தது. 1970-ம் ஆண்டு இளைப்பாறிய பின்னர் தமக்குப் பிடித்தமான ஆராய்ச்சித்துறையிலும் எழுத்துத்துறையிலும் ஈடுபட்டு உழைக்கலாயினுர்.

அத்தியட்சராகத் திகழ்ந்த பொழுதும், அறிஞராகவே உலகத்து மக்களால் போற்றப்பட்டவர் சபாபதி குலேந்திரன். இறையியலிலும், வாழ்க்கை வரலாற்றிலும் உயர்ந்த பல நூல்களை உருவாக்கிக் கிறிஸ்தவ இலக்கியத்தை வளர்த்து வந்தார். அவர் ஆங்கிலத்தில் எழுதிய நூல்களில் தலைசிறந்து விளங்குவது "Grace in Christianity and Hinduism" என்ற நூலாகும். இறையியற் கல்லூரிகளில் எழுந்தெண்ணி படிக்கப்படும் மணிவாசகம் இது. அவர் உருவாக்கிய தமிழ் நூல்களிலே சிறந்து விளங்குவது "கிறிஸ்த தமிழ் வேதாகமத்தின் வரலாறு" என்ற நூலாகும். வரலாற்றில் நாட்டம் கொண்டவர்களுக்கு இது நல்விருந்து.

இன்றும் சபாபதி குலேந்திரனின் பேனு எழுதிக்கொண்டேயிருக்கிறது. அவர் நெஞ்சிலே ஒளி இருக்கின்றது. வாக்கிலே இனிமை இருக்கிறது.

நமது பீஷ்மர் பல்லாண்டு வாழ எல்லா நன்மைக்கும் காரணராக விளங்கும் இறைவனை வேண்டுவோமாக.

### செய்திச் சிதறல்

#### சுகாதார வாரம்

யாழ்ப்பாண மாநகர சபை அக்டோபர் மாதம் 27-ம் திகதி தொடக்கம் சுகாதார வாரத்தைக் கொண்டாடத் தீர்மானமெடுத்துள்ளது. இவ்வாரத்தின் போது கலை, கலாச்சார ஊர்திகளின் பவனிகள், சுகாதாரக் கண்காட்சி, விளையாட்டுப் போட்டிகள், நகர் சுத்திகரிப்பு போன்ற நிகழ்ச்சிகளை நடாத்தவுள்ளது.

#### தென்னை உற்பத்திக்குக் கடன்

தென்னை பயிரிடுவோருக்கு உரம் பெறுவதற்கென இலங்கை வங்கியும் மக்கள் வங்கியும் கடன் வழங்கி வருகின்றன. இக் கடனை முதல் இரண்டு வருடங்களுக்குத் திருப்பிச் செலுத்த வேண்டியதில்லை. மூன்ரும் நான்காம் வருடங்களில் கடனைத் திருப்பிச் செலுத்தலாம்.

#### பரீட்சை முடிந்த ஒரு மாதத்தில் பரீட்சை முடிவுகள்

இனிமேல் (க. பொ. த.) பரீட்சைகள் நடந்து முடிந்த ஒரு மாதகாலத்திற்குள் பரீட்சை முடிவுகளைப் பரீட்சார்த்திகளுக்கு வழங்குவதன் மூலம் பெருமளவு மோசடிகளைத் தவிர்க்கக் கல்வியமைச்சு முடிவு செய்துள்ளது. பரீட்சை முடிந்ததும் பரீட்சை விடைத்தாள்கள் விசேட வாகனத்தில் பரீட்சைத் திணைக்களத்துக்கு எடுத்துவரவும் ஏற்பாடு செய்யப்படும். இதேவேளையில் தற்போது நடைபெற்று முடிந்த க. பொ. த. உயர்தரப் பரீட்சைகளைத் திரும்ப பாதிக்கப்பட்ட மாணவருக்கு மாத்திரம் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

#### கூட்டணிக்கு சூரியர் பாராட்டு

பல சோதனைகளுக்கு மத்தியிலும்கூட தமிழர் கூட்டணித் தலைவர்கள் மாவட்ட அபிவிருத்திச் சபைகளை ஏற்றது பொருளாதார ரீதியில் பாராட்டத்தக்க செயலென்றும், மாவட்ட மந்திரிப் பதவிகளையும் முன்பு ஏற்றிருந்தால் கடந்த இரு வருடங்களில் மிகச் சிறப்பாக வடக்கு கிழக்கை முன்னேற்றியிருக்கலாமென்றும் சர்கரத்தை சன சமூக நிலையமொன்று தனக்கு அளித்த வரவேற்பு வைபவம் ஒன்றின்போது பனம்பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவர் கனக சூரியர் பாராட்டுத் தெரிவித்தார்.

#### இரண்டு பெண் எம். பிக்கள் இடம்பெறுவர்

ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் பிரதம மந்திரி பிரேமதாசா தலைமையிலான இலங்கைக் குழுவில் இரண்டு பெண் எம். பிக்கள் இடம்பெற்றுள்ளனர். வலப்பனை எம். பி. செல்வி ரேணுகா, ஹேரத் வாரியப்பொல எம். பி. திருமதி அமராபியசிலி ஆகியோரே மேற்படி குழுவில் இடம்பெற்ற இரண்டு பெண் எம்.பிக்களாவர்.

#### இலங்கை தமிழாசிரியர் சங்க ஆட்சிக் குழுக் கூட்டம்

இலங்கை தமிழாசிரியர் சங்கத்தின் ஆட்சிக் குழுவின் கூட்டம் 4-ம் திகதி மட்டக்களப்பில் நடைபெற்றது.

#### மகாவலி பற்றிய பொருட்காட்சி

மகாவலி அபிவிருத்தி சம்பந்தமான பொருட் காட்சியொன்று யாழ். மத்திய கல்லூரியில் இம் மாதம் 8-ம் திகதி தொடக்கம் 5-ம் திகதிவரை நடைபெற்றது. இப்பொருட்காட்சியினை மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திசாநாயக்கா ஆரம்பித்து வைத்தார்.

#### அராலியில் சிரமதானம்

அராலி தெற்கு ஆசாபக்குளம் பிள்ளையார் கோவில் குளம் கடந்த ஒரு மாத காலமாக வார இறுதி நாட்களில் சிரமதான முறையில் ஆழமாக்கப்பட்டு வருகின்றது.

#### 36 தகராறுகள் தீர்க்கப்பட்டன

நான்கு மாதங்களுக்கு முன்னதாக அமைக்கப்பட்ட அளவெட்டி பொலீஸ் — பொதுமக்கள் நட்புறவுச் சபை இதுவரை 36க்கும் மேற்பட்ட சிறு பிணக்குகளை நீதிமன்றம் வரை செல்லாது சமாதானமாகத் தீர்த்து வைத்துள்ளது.

#### கிறிஸ்தவ ஆராதனை

போலாந்தில் கம்யூனிஸ ஆட்சி வந்த 36 வருடங்களின் பின் தற்போது முதன்முதலாக கிறிஸ்தவ ஆராதனைகளும் கீதங்களும் ஞாயிற்றுக்கிழமைகளில் வானெலியில் ஒலிபரப்பப்படுகிறது.

#### கொடும்பாவி எரிப்பு

நமது நாட்டின் தலைவரான ஜே. ஆர். ஜெயவர்த்தனுவுக்கும் அவரது சகாக்கள் சிலருக்கும் கண்டி போகம்பரை மைதானத்தில் நடைபெற்ற சுதந்திரக் கட்சியின் பொதுக்கூட்டத்தின்போது கொடும்பாவி எரிக்கப்பட்டுள்ளதாம்.

## சென். பீற்றர்ஸ் ஆலயத்தின் இசை நிகழ்ச்சி

சென்றமாதம் 19-ம் திகதி வெள்ளிக்கிழமை "காலமெல்லாம் மெல்ல மறைந்திடும் போது காத்திருப்பாய் இறைவா" என்ற இசை நிகழ்ச்சியை சென். பீற்றர்ஸ் திருச்சபையார் நடத்தினர். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் திரு. விபுலானந்தமூர்த்தி பாடல்களைப் பாடினார். சென். பீற்றர்ஸ் வாலிப சங்கத்தினரும் சில சிறப்புப் பாடல்களைப் பாடினர்.

## பேச்சுப் போட்டியில் பரிசு பெற்றனர்

சென்ற மாதம் 20-ம் திகதி சனிக்கிழமை சென். ஜோன்ஸ் கல்லூரியின் இலங்கைத் திருச்சபையின் வாலிபர் விழா நடைபெற்றது. கோப்பாய், நல்லூர், சுண்டிக்குளி திருச்சபை வாலிபர்கள் பலர் இவ்விழாவில் கலந்து கொண்டனர். இவ்விழாவில் நடைபெற்ற பேச்சுப் போட்டியில் பின்வருவோர் பரிசு பெற்றனர்.

முதற் பரிசு: செல்வி மைதிலி தியாகராசா

இரண்டாம் பரிசு: செல்வன் J. R. குமாரசாமி

மூன்றும் பரிசு: செல்வன் தயாளசீலன் செல்வரத்தினம்

## இடிஅமீன் பற்றிய படம்

இடிஅமீனின் எட்டு வருட கொடுங்கோல் ஆட்சியையும் அதில் இடம்பெற்ற சித்திரவதைகள், கசமக்களியாட்டங்கள், படுகொலைகள், இஸ்ரவேலின் என்டபே விமான நிலைய அதிரடித் தாக்குதல் என்பவற்றைச் சித்தரிக்கும் வகையில் "இடிஅமீனின் தோற்றமும் வீழ்ச்சியும்" என்ற படத்தை கென்யாவில் வசிக்கும் இந்தியரான சரத் படேல் தயாரித்துள்ளார்.

இப்படத்தைத் தயாரிக்க 50 லட்சம் டொலர் செலவாகியுள்ளது. இப்படத்தில் இடிஅமீனாக நைரோபியில் கடை வைத்திருக்கும் ஜோசப் ஒலிட்டா என்பவரும், இடிஅமீனால் சித்திரவதை செய்யப்படும் வெள்ளையராக அதே வெள்ளையரும் பாத்திரமேற்று நடித்துள்ளனர்.

## "உதயசூரியன்" வெளியீடு

தமிழர் விடுதலைக் கூட்டணி தனக்கென "உதயசூரியன்" என்ற பெயரைக் கொண்ட பத்திரிகையை உத்தியோகபூர்வமாக வெளியிட்டுள்ளது. மேற்படி பத்திரிகை சென்ற மாதம் 28-ம் திகதி வெளியிடப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் மாதம் இருமுறை இப்பத்திரிகை வெளிவரவிருக்கிறது. இதன் பிரசுரகர்த்தாவாக யாழ்ப்பாண எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் இருப்பார்.

## ஜயவர்த்தனபுர பாராளுமன்றம்

இலங்கையின் வரலாற்றிலேயே முக்கியத்துவத்தைப் பெறும் கோட்டே ஸ்ரீ ஜயவர்த்தனபுரவில் புதிய பாராளுமன்றக் கட்டிடம் அமைக்கப்படவுள்ளது. இதற்கான கட்டிட வேலைகளை ஜப்பானிய ஜபரி பாவா நிறுவனம் ஏற்றுக்கொண்டுள்ளது. இதற்கான நவரத்தினங்கள், தொன்மை மிக்க சின்னங்கள் அடங்கிய பேழை நமது ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா அவர்களால், சென்ற மாதம் 22-ம் திகதி திங்கட்கிழமை சம்பிரதாயபூர்வமாக அடிக்கல் நாட்டிய போது வைக்கப்பட்டது. மேற்படி பாராளுமன்றம் 481000 சதுரமீட்டர் தரைப் பகுதியையும், 38450 மில்லிமீட்டர் உயரத்தையும், 68800 மீட்டர் சுற்றளவையும் கொண்டிருக்கும். ஏழு மாடிகளைக் கொண்டதாக அமைக்கப்படும் இப் பாராளுமன்றத்தில் விசேடமாக பத்திரிகையாளர் இருப்பிடம், ஓய்வறை, 500 பார்வையாளர் இருக்கக் கூடிய இருப்பிடம், வெளிநாட்டுப் பார்வையாளர் 150 பேர் இருக்கக்கூடிய பிரத்தியேகமான இருப்பிடம் என்பவற்றைக் கொண்டமையும். மேற்படி பாராளுமன்றத்தின் கட்டிட வேலைகள் 1981 டிசம்பருக்கு முன் முடிக்கப்படும். 1981 பெப்ரவரி 4-ம் திகதி நமது ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனாவால் திறந்து வைக்கப்படும்.

## பொறுத்தது போதும் மேடையேறுகிறது

ஜனாதிபதி விருது பெற்ற நாடகமான நாடக அரங்கக் கல்லூரியின் தயாரிப்பான "பொறுத்தது போதும்" என்ற நாடகம் அக்டோபர் மாதம் 10-ம் திகதி மாலை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் மேடையேற்றப்படவிருக்கிறது.

## அபிப்பிராய வாக்கெடுப்பு வேண்டுமாம்

மாவட்ட அபிவிருத்திச் சபைகள் பற்றி அபிப்பிராய வாக்கெடுப்பு நடாத்தி மக்களது அங்கீகாரத்தை பெற்ற பின்னரே அதனை அமுல்படுத்த வேண்டுமென்று திரிநிக்காய மகாசங்க சபா பௌத்த குருமார் சங்கம் ஜனாதிபதியிடம் கோரியுள்ளது.

## எஸ்லோன் பைப் திருட்டு

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் தொழில் நுட்பக் கல்லூரியில் வைக்கப்பட்டிருந்த 6250 ரூபா பெறுமதியான எஸ்லோன் பைப்புகள் திருடப்பட்டுள்ளன. இது சம்பந்தமாக பொலீஸார் மேற்கொண்ட புலன் விசாரணையின் பலனாக கொட்டக்காட்டைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது அவர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டனர்.

## சுகாதாரப் பத்திரிகை

அரசாங்க மருத்துவ மாதர் சங்கம் பொதுமக்களுக்குப் பல வழிகளிலும் பிரயோசனப்படும் விதத்தில் குழந்தைகளின் வளர்ச்சி, கர்ப்பவதிகளின் ஆரோக்கியம், உணவு — பாதுகாப்புப் பற்றிய சுகாதார சம்பந்தமான விடயங்களைப் பிரசுரிக்கும் விதத்தில் ஒரு பத்திரிகையை வெளியிடத் தீர்மானித்துள்ளது.

## சீனி ஆலைகள்

யாழ். மாவட்டத்தில் அல்வாய், வல்லை, சண்டிலிப்பாய், சரசாலை, கொடிகாமம் போன்ற இடங்களில் சீனி ஆலைகள் அமைக்கப்படவுள்ளன. இத்தொழிற்சாலைகள் மூலம் தினமும் 1200 இருத்தல் வரையிலான சீனியை உற்பத்தி செய்ய முடியுமென்றும், இதன்மூலம் நூற்றுக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பைக் கூட அளிக்க முடியுமென்றும் கூறப்படுகின்றது.

## மலர் வெளியீடு

எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் செயலாளருமான திரு. அ. அமிர்தலிங்கத்தின் பிறந்த தினத்தையொட்டி மக்கள் குரல் என்ற பத்திரிகை ஒரு மலரை வெளியிட்டது. இம்மலர் வெளியீடு யாழ். பல்கலைக்கழகத்துக்கண்மையில் நடைபெற்ற தலைவரின் பிறந்ததின விழாவில் திரு. M. சிவசிதம்பரத்தினால் வெளியீடு ஆரம்பிக்கப்பட்டது.

## நூல் ஆக்குவர்

1948-ம் ஆண்டு தொடக்கம் தமிழ் மக்கள் மத்தியில் நடைபெற்ற அறவழிப் போராட்டங்களை வரலாற்று ரீதியாகத் தொகுத்து நூலுருவில் எழுதும் பொறுப்பை எழுத்தாளர் வாசகரைவாணனிடம் அறவழிப் போராட்டக்குழு ஒப்படைத்துள்ளது.

## நயினாதீவிற்கு திரு. வில்லியம் தேவதாஸன்

நயினாதீவுத் திருச்சபையின் ஊழியனாக திரு. வில்லியம் தேவதாசன் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் புங்குடுதீவு திருச்சபைப் பணியுடன் நயினாதீவு ஊழியத்தையும் மேற்கொள்வாரெனத் தெரிகிறது.

## நாடு முழுவதும் மெட்ரிக் முறை

இம்மாதம் முதலாம் திகதி புதன்கிழமை தொடக்கம் நாடு முழுவதும் மெட்ரிக் முறை அமுலுக்கு வருகிறது. ஏற்கனவே 24 மாவட்டங்களில் 18 மாவட்டங்களிலும் இம்முறை அமுலுக்கு வந்துள்ளது. யாழ்ப்பாணம் உட்பட ஆறு மாவட்டங்களிலேயே இம்மாதம் முதல் மெட்ரிக் முறை புகுத்தப்படுகிறது.

## ஸ்தான பிரசங்கியாக அங்கீகரிக்கும் ஆராதனை

கம்பனை மெதடிஸ்த சபையின் ஆலயத்தில் கடந்த 21-9-80 ஞாயிறு அன்று திரு. T. J. பாக்கியநாதன் அவர்களை ஸ்தான பிரசங்கியாக அங்கீகரிக்கும் ஆராதனை நடாத்தப்பட்டது. ஆராதனையை இலங்கை இறையியற் கல்லூரி, பிலிமத்தலாவைச் சேர்ந்த விரிவுரையாளர் வண. போல் பெஞ்சமின் அவர்கள் நடாத்தினார்கள்.

ஆராதனை வேளையில் திரு. பாக்கியநாதன் அவர்கள் தனது சாட்சியில், தான் இவ்வாறு ஸ்தான பிரசங்கியாக அழைக்கப்படுவதற்குத் தனது சிறு பராயந்தொட்ட பள்ளி வாழ்க்கையும், ஆசிரியத் தொழிலும் உறுதுணையாய் இருந்தன எனபதோடு, தான் ஸ்தான பிரசங்கியாக வருவதற்கு உற்சாகமூட்டியவர்கள் வணக்கத்துக்குரிய L. J. ஜூலியன் போதகர் அவர்களும, கம்பனை மெதடிஸ்த சபை ஊழியக்காரர் திரு. D. J. S. கோயில்பிள்ளை அவர்களுமே எனக் குறிப்பிட்டார். சபை ஊழியக்காரரே தன்னை ஏற்ற தருணங்களில் உற்சாகப்படுத்தி, தனக்கு உறுதுணையாய் இருந்து பல உதவிகளையும் ஸ்தான பிரசங்கியாக வருவதற்கு உதவினார் என்றும் குறிப்பிட்டார்.

ஆராதனை முடிவில் திரு. ஜோன் பாக்கியநாதனைக் கௌரவிக்கும்முகமாகவும், வந்திருந்த சபையோர்களை மகிழ்விக்கும் வண்ணமாகவும், கம்பனை மெதடிஸ்த சபை ஓய்வுநாட் பாடசாலை மாணவர்களினால், 'உதவி அளிக்கும் இயேசு" எனும் குட்டி நாடகமும், சபை வாலிபர் சங்கத்தினரால் "தியாகத்தின் பாதையிலே" எனும் சமூக நாடகமும் நடித்துக் காட்டப்பட்டன.

ஸ்தான பிரசங்கியாக ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கான சான்றிதழையும் பரி. வேதாகமம் ஒன்றையும், வண. போல் பெஞ்சமின் அவர்கள் திரு. T. J. பாக்கியநாதன் ஆசிரியருக்கு அளித்தார் வாலிப சங்கத்தினராலும் ஸ்தான பிரசங்கியாரைப் பாராட்டும்முகமாகச் சிறிய பரிசும் உவந்தளிக்கப்பட்டது.

இறுதியாக ஸ்தான பிரசங்கியாரான திரு. T. J. பாக்கியநாதனாலும், அவர்கள் குடும்பத்தினராலும் வந்திருந்த அனைவருக்கும் தேநீர் விருந்து அளிக்கப்பட்டது.

## "நான் கண்ட ஜெயசிங்கம்"

(வண. எம். ஏ. இரத்தினராஜா)

1

முப்பது ஆண்டின் முன்னே முதன் முதலாகக் கண்டேன்
எப்படித் தேவசேவை இதமுடன் செய்வதென்றே
செப்பிடு வரங்களெல்லாம் செறிந்திடக் கண்டேன் மேலும்
ஒப்பரு நண்பனாக ஊழியம் தன்னிற் கண்டேன்.

2

பிறப்பிலே பெரியோன் நல்ல பண்பிலே பெரியோன் சொல்லின்
சிறப்பிலே பெரியோன் செய்யும் தொண்டிலே பெரியோன் தன்னை
மறுப்பவர் மனதை மாற்றும் மரபிலே பெரியோன் தேவ
வரப்பிரசாதமாக வாழ்ந்தநற் பெரியோன் கண்டேன்.

3

வாக்கிலே உறுதி! வாழும் வகையிலே உறுதி! கொண்ட
போக்கிலே உறுதி! கண்ட பொருளிலே உறுதி! நல்ல
நோக்கிலே உறுதி! நெஞ்சின் நினைவிலே உறுதி! தன்னைத்
தாக்கிட எதுவந்தாலும் தளர்ந்திடா உறுதி கண்டேன்.

4

அன்பொடு பேசி நின்று ஆண்டவன் சேவை தன்னில்
இன்புறு முகந்தான் காட்டி இனிவுடன் உபசரிக்கும்
பண்பெலாம் நிறைந்த தொண்டன் பலரையும் கவர்ந்தோன் எந்தன்
நண்பனாய் வாழ்ந்து போந்த நலமதை நானும் கண்டேன்.

5

ஆண்டவன் நாமம் வாழி! அவனது சேவை வாழி!
வேண்டிடு மடியார் வாழி! விருப்புடன் அவன் நாமத்தைத்
தூண்டிடு தொண்டர் வாழி! தூய நல்லிறைவன் ஆசி
நீண்டுமே வாழி! நீயும் நிறுவிய தொண்டு வாழி!

**EDITORIAL**

## Daily Bread and Social Justice

"Only a Socialist Poland can be a free and independent state, with inviolable borders" said Communist Party Boss Gierek attempting to defuse an explosive situation in his country in recent months.

A million workers of the ship-yards of *Gdansk* and the industrial rigions of *Silesia* (Gierek's own birth place and political strong-hold) participated in a wave of strikes which led to the establishment of the first independent Unions in a Soviet bloc country.

But what Gierek and probably the Western observers failed to see was that it was not "the socialist system" that caused the gripes but the cumbersome bureaucracies and economic misdirection which were keeping the socialist system off its track.

Bread and butter issues, as for instance a 'roll back' in the price of meat were only the tip of the iceberg. The fundamental issues were much deeper and hidden.

What was a classless society in Poland had all of a sudden spawned insidious branches. There was one class which could. with their *dollars* or *deutsche marks* get anything they want from pork roast to Fiat cars. There was another class which was struggling to live on a subsistence level with *sloty* (the local currency), forming endless lines in front of butcher's shop with near empty shelves.

There was still a third class which had neither *dollars* nor *sloty* to buy their necessaries because of the natural calamity of this year's floods and low crop yields.

*Moonlighting* as the expression goes was a natural pastime. It referred to workers in the public sector idling their time during the day at their jobs with the contemptuous jibe "The government pretends to give us a wage and we pretend to work'. In the evenings, the workers take some other assignment in the Private Sector which they have to perform with a due sense of duty in return for the wages they get.

This picture of a contemporary situation in Poland, which we have gleaned from more than one source, reflects, in our view with same shades of difference a panorama of today's Sri Lanka.

Ladlords in our capital city or even house-owners with make-shift annexes, want rents in dollars or pounds sterling and not in Sri Lankan currency. Hotel Complexes are rising up to meet the gorgeous needs of the dollar magnates.

"Quite a load of good eating for the Businessman" begins the text of a large advertisement (in one of our dailes) of a leading Hotel Complex in Sri Lanka. But to more than eighty per cent of our 14 million citizens, such a 'load' is only a pipe dream. Even bread at two rupees and five cents a pound, [popular as a staple diet in Sri Lanka because of its saving on fuel for the consumer] is a luxury for a labourer with a family, whose daily wages does not exceed Rs. 20/-.

Hospital complexes are coming up at Peradeniya (430 beds) and Jayawardenepura (1001 beds). But conditions in our government hospitals are near appalling - Patients lying under the bed, are not a rare phenomenon.

Government School buildings in rural areas are in most cases now two storeyed structures. But many children, especially in the plantation areas, cannot afford to go to school.

A sum of 164.4 million rupees has been spent on higher education in the country. But the scheme of admissions to universities is yet under litigation and the answer scripts scandal has eroded the morale of the students and parents to a degree unprecedented in our annals.

"Daily Bread and Social Justice" (an expression we have borrowed from Pope Paul II) have at no time in our annals been so inextricably intertwined as at present. [Daily Bread does not of course, connote food alone but all amenities of life necessary for decent living.]

According to an article on "Development Aid" in *Tribune* (20-9-80) every dollar which the World Bank puts into development projects in the third World, brings 1.80 dollars in orders to the industrial countries. Foreign aid, as a writer puts, it is, at best, an antibiotic which conceals the symptoms while the disease remains malignant. What is the response of the Christian Church to the situation in Sri Lanka today?


We are reminded, in this context, of the pungent comment of an Asian delegate who attended one of the big *Consultations* held from time to time on *big* thems in our Asian capitals.

"Overwhelming poverty and multi-faceted religiosity, two inseperable reailties which constitute the Asian cotext ............ I wondered about these delegates who were most vocal in condemning multi-nationals capitalist systems, consumerism and the the like and *who then proceeded to change their plane reservations inorder to have an extra shopping day in Singapore*"

What the former Archbishop of Canterbury Dr. Donald Coggan (who is expected to arrive in Sri Lanka on Monday) said, of society in Britain has a caustic relevance to the Christian Church today in Asia:—

"The crucial question is not so much the kind of society we want *but the kind of people we need to be* to achieve it".

## A Message from the Rev. (Dr.) James S. Mather on his 90th Birthday



The Editor has asked me for a message on my 90th Birthday, 30th September. I accept his invitation gladly, and thank him for the opportunity he has given to me. The following words of the Psalmist, come to my mind often, in these days. "*Thou art the God who doest wonders*", Ps. 77:14. My life in the past years, has not been smooth-sailing, but full of obstacles and difficulties, when I had high mountains to climb, and dark valleys to cross, as well as many privileges to enjoy, and which were denied to many people. Life has been to me actually a series of miracles and wonders wrought by God, storms made calm, mountains moved into the sea etc.

I have found that life cannot be separated into the religious and the secular, or into one sphere where you need God, and the other sphere where you may drop God out. Man belongs to God, and is not his own. It is God who created man, and ever sustained him. Man's body, mind and soul are God's gifts to man. He is the Proprietor and has a plan and purpose for the life of every person, man and woman. Therefore, man's aim and purpose in life should be to do and to be what God has planned for him. As Christians we believe that in the Life and Teachings of our Lord Jesus Christ, God has revealed His plan for us, and that we should ever seek the fulfilment and the achievement of this plan. *Jesus saves the whole person, body mind and soul.*

It is said that the difference between a Saint and a Sinner is that the former is never satisfied with himself, but the latter is. I have now served God and our country for sixtynine (69) years; and as an ordained minister for over sixty years — I was ordained in February 1920. All these years, one great lesson I learnt is what St. Paul wrote in I Corinthians 3:7, "neither is he that planteth any thing, neither he that watereth; but God that giveth the increase". Wherever the work of the Church seemed to go forward, I noticed every time, the Hand of God behind it all. Our Lord promised to His Disciples, "Lo, I am with you always," Mt. 28:18. Here we have the secret of victory and forward-march in the work we are called to do. In those difficult times, we have no ground for despair, but our Lord's companionship and partnership spur us to march forward, with our full Trust in Him. In my ministry all these past years, it is this trust and confidence in God, that helped me, never to despair, but ever to ignore the 'thorns', and to follow Him, to the end, whatever the cost be.

[We are happy to felicitate Rev. (Dr.) James Mather on his 90th Birthday which he celebrated at his home in No. 5, Nimal Road, Colombo 4 on 30-9-80.

Dr. Mather has been a subscriber to the *Morning Star* since 1912 when he was a student at the Bangalore Theological College.

He writes to us that when he wrote his first article to the *Morning Star* in 1913, as a second year student at Bangalore, the Editor wrote to him, "*I see, God has given to you a pen as, well, to preach the gosphel*".

We wish Dr. Mather many more years of strength and happiness in His service.]

— *Editor.*

## New Principal for Jaffna Central

Mr. N. R. Ratnasingham, the Deputy Principal of Jaffna Central College, has been appointed Principal of the College consequent on the transfer on promotion of Mr. E. M. Shanmuganathan as Director of Education (Tamil Unit) in Colombo.

Mr. Ratnasingham is one of the few Christian Principals under the Government in Sri Lanka.

The rule that the Principal of a Government School should belong to the religion of the majority of students of that school, has now been relaxed by the present government. The rule does not necessarily apply to denominational schools which were taken over by the State in 1960.

*Registered as a Newspaper at the G. P. O., ri Lanka under No. QB/8920/78.*

Printed for the Jaffna Diocese of the Church of South India by Mr. Philp Matthews residing at 19, Lady of Miracles East Road, Jaffna, and published by Mr. Alvappillai Rajasingam, 330, Navalar Road, Jaffna, at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna on Friday, 3rd October, 1980.